# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2024.06.10 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


## வெளிநாட்டு தீர்ப்புக்களைப் பரஸ்பரம் ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்துதல்

**ஏனைய நாடுகளின் நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை இலங்கையில் பரஸ்பரம் ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; (93 ஆம் அத்தியாயமான) வெளிநாட்டுத் தீர்ப்புக்களின் வலுவுறுத்துகைக் கட்டளைச்சட்டம் மற்றும் (94 ஆம் அத்தியாயமான) தீர்ப்புக்களின் பரஸ்பர வலுவுறுத்துகைக் கட்டளைச்சட்டத்தை நீக்குவதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 42.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## வெளிநாட்டு தீர்ப்புக்களைப் பரஸ்பரம் ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்துதல்

*ச.வ.ஓ. 19/2022*

***ஏனைய நாடுகளின் நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை இலங்கையில் பரஸ்பரம் ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்துவதற்கு ஏற்பாடுசெய்வதற்கும்; (93 ஆம் அத்தியாயமான) வெளிநாட்டுத் தீர்ப்புக்களின் வலுவுறுத்துகைக் கட்டளைச்சட்டம் மற்றும் (94 ஆம் அத்தியாயமான) தீர்ப்புக்களின் பரஸ்பர வலுவுறுத்துகைக் கட்டளைச்சட்டத்தை நீக்குவதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமான தொரு சட்டம்.***

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

***1.*** (1) இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, வெளிநாட்டு தீர்ப்புக்களைப் பரஸ்பரம் ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்துதல் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

(2) இப்பிரிவின் ஏற்பாடுகள் தவிர்ந்த, இச்சட்டத்தின் ஏற்பாடுகள், (இச்சட்டத்தில், "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள் சட்டமூலம் பாராளுமன்றத்தின் சட்டமொன்றாக வருகின்ற தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பாகம் I

**சட்டத்தின் ஏற்புடைமை**

சட்டத்தின் ஏற்புடைமை

**2.** (1) (அ) (i) இலங்கை அரசாங்கமும் ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கமும் இலங்கை நீதிமன்றங்களினதும் அத்தகைய வெளிநாட்டு நீதிமன்றங்களினதும் தீர்ப்புக்களை பரஸ்பரம் ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்துதல் தொடர்பில் ஏதேனும் பொருத்தனையைச் செய்துகொள்கின்றவிடத்து; அல்லது

(ii) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டம் வெளிநாடொன்றின் நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை இலங்கையில் பரஸ்பரம் ஏற்றங்கீகரிப்பதற்கு, பதிவுசெய்வதற்கு மற்றும் வலுவுறுத்துவதற்கு ஏற்பாடுசெய்கின்றவிடத்து; அத்துடன்

(ஆ) அத்தகைய வெளிநாட்டு நீதிமன்றங்களின் தீர்ப்புக்களுக்கு இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளை நீடிப்பதன்மூலம், இலங்கை நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை அத்தகைய வெளிநாட்டில் ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்துதல் தொடர்பில் நடாத்துகை பற்றிய கணிசமானளவிலான பரஸ்பரத்தன்மை உறுதிப்படுத்தப்படும் என அமைச்சர் திருப்திப் படுகின்றவிடத்து,

அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம், இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறாக அவ்வெளிநாட்டின் அத்தகைய நீதிமன்றங்களின் தீர்ப்புக்களுக்கு நீடிக்கப்படுதல் வேண்டும் என வெளிப்படுத்தலாம்.

(2) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்றை ஆக்குவதில் அவர் அது தோதானதெனக் கருதினால், வெளிநாட்டு அலுவல்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் மற்றும் சட்டத்துறைத் தலைமையதிபதியின் கருத்துக்களை நாடலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று-

(அ) வர்த்தமானியில் அத்தகைய கட்டளை வெளியிடப் பட்ட தேதியன்று அல்லது அதன்கண் குறித் துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) நான்காம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான காலம்வரை அல்லது (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பொருத்தனை அல்லது எழுத்திலான சட்டம் வலுவிலுள்ளவாறான அத்தகைய காலம்வரை வலுவில் இருத்தல் வேண்டும்.

(4) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவ்வுட்பிரிவின்கீழ் முன்னர் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அடுத்துப்பின்ன ரான கட்டளையொன்றின்மூலம் திருத்தலாம், வேறுபடுத்தலாம் அல்லது இல்லாதொழிக்கலாம்.

(5) (அ) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன்பின்னர், மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

(ஆ) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் கட்டளை, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் உரியமுறையில் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) கட்டளையொன்று எத்தேதியன்று ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதிபற்றிய அறிவித்தலொன்று வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

இச்சட்டம் எத் தீர்ப்புக்களுக்கு ஏற்புடையதாதல் வேண்டுமோ அத்தீர்ப்புக்கள்

**3.** (1) இரண்டாம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட வெளிநாடொன்றின் நீதிமன்றமொன்றின் தீர்ப்பொன்று அத்தகைய தீர்ப்புக்கான திறத்தவர்களுக்கிடையே இறுதியானதும் முடிவானதுமாகவிருப்பின் மட்டும் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய தீர்ப்புக்கு ஏற்புடையனவாதல் வேண்டும், அத்துடன்-

(அ) பின்வரும் நிபந்தனைகளுள் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை விண்ணப்பதாரரினால் திருப்திசெய்யப்படின் மட்டும் ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(i) விடயத்துக்கேற்ப, தீர்ப்புக்கடன்கொடுநர் அல்லது தீர்ப்புக்கடனாளி தொடக்க நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகளுக்கான திறத்தவரொருவராக வந்த நேரத்தில் அத்தகைய தீர்ப்புக்கடன் கொடுநர் அல்லது தீர்ப்புக்கடனாளி தொடக்க நீதிமன்ற நாட்டின் வதிவாளரொருவராகவிருந்தார்;

(ii) தீர்ப்புக்கடனாளி இயற்கை ஆளொருவராகவிருப்பின், அத்தீர்ப்புக்கடனாளி தொடக்க நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகளுக்கான திறத்தவரொருவராக வந்த நேரத்தில் அவர் தொடக்க நீதிமன்ற நாட்டில் அவரது பிரதான தொழிலிடத்தைக் கொண்டிருந்தார்;

(iii) தீர்ப்புக்கடன்கொடுநர் வழக்கொன்றில் அவரது உரிமைக்கோரிக்கையை அல்லது

எதிர்க்கோரிக்கையிலான உரிமைக் கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு அத்தகைய தீர்ப்பை பெற்றுள்ள ஆளாகவிருக்கின்றார்;

(iv) தீர்ப்புக்கடனாளி தொடக்க நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகளுக்கான திறத்தவரொருவராக வந்த நேரத்தில் தொடக்க நீதிமன்ற நாட்டில் தனிவேறான சட்ட ஆளுமையுடன் அல்லது தனிவேறான சட்ட ஆளுமையின்றி ஒரு கிளை, முகவராண்மை அல்லது வேறு தாபனத்தை அத்தகைய தீர்ப்புக்கடனாளி பேணியிருக்கின்றார்;

(v) தீர்ப்புக்கடனாளி தொடக்க நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்கு கீழ்ப்படிவதற்கு உடன்பட்டுள்ளார் அல்லது கீழ்ப்படிந்துள்ளார்;

(vi) அசையும் ஆதனமாகவிருந்தாலுஞ்சரி அல்லது அசையா ஆதனமாகவிருந்தாலும்சரி, தீர்ப்பு தொடர்பான ஆதனம் தொடக்க நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகளின் நேரத்தில் இலங்கையில் அல்லது தொடக்க நீதிமன்ற நாட்டில் அமைந்துள்ளது;

(vii) விண்ணப்பதாரர், தீர்ப்புத் தேதியன்றுள்ளவாறு அல்லது அதன்பின்னர் தொடக்க நீதிமன்றத்தின் தீர்ப்பின்கீழ் ஏதேனும் உரிமை, அக்கறை, நன்மை, உரித்து, அந்தஸ்து அல்லது உரித்துடைமையைப் பெற்றுள்ளார்; அல்லது

(ஆ) திருமணமொன்றைக் குலைத்தல் அல்லது வெற்றான தாக்கல் அல்லது திருமணமொன்றுக்கான திறத்தவர்களின் பிரிவினைக்கான தீர்ப்பொன்றின் விடயத்தில், அத்தகைய தீர்ப்பு திருமணமொன்று நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் அல்லது அதற்குப் பின்னர் செய்யப்பட்டிருந்திருப்பினுஞ்சரி அல்லது அத்தகைய தீர்ப்பு நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் அல்லது அதற்குப்பின்னர் பதியப்பட்டிருந்திருப்பினுஞ்சரி (112 ஆம் அத்தியாயமான) திருமணப் பதிவுக் கட்டளைச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அத்தகைய திருமணம் தொடர்பில் பெறப்படின் மற்றும் பின்வருமாறு இருப்பின் மட்டும் ஏற்புடையனவாதல் வேண்டும்-

(i) திருமணத்துக்கான இரு திறத்தவர்களுள் ஒருவர் தீர்ப்புத் தேதியில் உள்ளவாறாக அத்தகைய நாட்டை வாழிடமாகக் கொண்டிருப்பின்;

(ii) திருமணத்துக்கான இரு திறத்தவர்களுள் ஒருவர் தீர்ப்புத் தேதிக்கு நேர்முன்னர் ஓராண்டுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு அத்தகைய நாட்டில் வழக்கமாக வதிந்தவராகவிருப்பின்;

(iii) திருமணத்துக்கான இரு திறத்தவர்களுள் ஒருவர் தீர்ப்புத் தேதியில் உள்ளவாறாக அத்தகைய நாட்டின் நாட்டினத்தவராக இருந்திருப்பின்; அல்லது

(iv) இரு திறத்தவர்களும் அத்தகைய நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்கு அமைந்தொழுகுபவர்களாகவிருப்பின்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், வெளிநாடொன்றின் நீதிமன்றமொன்றின் தீர்ப்பொன்றின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வரி, விதிப்பனவு, குற்றப்பணம் அல்லது வேறு தண்டத்துக்கு ஏற்புடையனவாதலாகாது.

## பாகம் II

## வெளிநாட்டு தீர்ப்புக்களை ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்துதல்

*வெளிநாட்டு தீர்ப்பொன்றை ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்துவதற்கான விண்ணப்பம்*

**4.** விண்ணப்பதாரர் ஒருவர் வெளிநாட்டு தீர்ப்பொன்றை ஏற்றங்கீகரிப்பதற்கும், பதிவுசெய்வதற்கும் மற்றும் வலுவுறுத்துவதற்கும் பதிவுசெய்யும் நீதிமன்றத்துக்கு இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தகவல்களுடனும் ஆவணங்களுடனும் சேர்த்து அத்தகைய படிவத்திலும் முறையிலும்–

(அ) இறுதித் தீர்ப்பை மெய்யென உறுதிப்படுத்தி தொடக்க நீதிமன்றத்தின் இயைபான அதிகாரியினால் வழங்கப்படும் சான்றிதழொன்றுடன் சேர்த்து அத்தகைய தீர்ப்புத் தேதியிலிருந்து பத்து ஆண்டுகளினுள் விண்ணப்பமொன்றைச் செய்யலாம்; அத்துடன்

(ஆ) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் பாகம் II இன் அத்தியாயம் XXIV இன் ஏற்பாடுகளுக்கிணங்க, சுருக்க நடவடிக்கைமுறை என்ற வகையாக விண்ணப்பமொன்றைச் செய்யலாம்:

ஆயின், எவ்வாறாயினும், விண்ணப்பதாரர் அத்தகைய தாமதத்துக்கான காரணங்கள் செல்லுபடியானவை என நீதிமன்றத்தின் திருப்திக்கு எண்பிப்பின், இறுதித் தீர்ப்புத் தேதியிலிருந்து பத்து ஆண்டுகளின் பின்னர் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றை பதிவுசெய்யும் நீதிமன்றம் ஏற்றுக் கவனிக்கலாம்:

ஆயின், மேலும் பதிவுசெய்யும் நீதிமன்றமானது, வாய்மொழிச் சான்றைச் சமர்ப்பிப்பதற்கு திறத்தவர்களை அனுமதித்தலாகாது என்பதுடன், வெளிநாட்டுத் தீர்ப்பை ஏற்றங்கீகரிப்பதற்கான, பதிவுசெய்வதற்கான மற்றும் வலுவுறுத்துவதற்கான விண்ணப்பத் தேதியிலிருந்து ஆறு மாத காலப்பகுதியொன்றினுள் மனுக்கள், ஆட்சேபனைகள் பற்றிய கூற்றுக்கள், சத்தியக்கடதாசிகள் மற்றும் அத்தகைய திறத்தவர்களினால் அளிக்கப்பட்ட வேறு எவையேனும் ஆவணங்கள் மீது வழக்கு நடவடிக்கைகளை நிறைவு செய்தலும் வேண்டும்.

வெளிநாட்டுத் தீர்ப்பொன்றைப் பதிவுசெய்தல்

**5.** (1) நான்காம் பிரிவின்கீழ் வெளிநாட்டு தீர்ப்பொன்றை ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்துவதற்கான விண்ணப்பமொன்றைப் பெறுவதன்மேல், பதிவுசெய்யும் நீதிமன்றமானது, விண்ணப்பத்தேதியில் உள்ளவாறாக-

(அ) அத்தகைய தீர்ப்பானது, எத்தீர்ப்பொன்றுக்கு இச்சட்டம் ஏற்புடையதாகின்றதோ அத்தீர்ப்பொன்றாக வுள்ளது எனவும்;

(ஆ) விண்ணப்பதாரர் தொடக்க நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பின்கீழ் ஏதேனும் உரிமை, அக்கறை, நன்மை, உரித்து, அந்தஸ்து அல்லது உரித்துடைமையைப் பெற்றுள்ளார் எனவும்; அத்துடன்

(இ) விண்ணப்பமானது 4 ஆம் பிரிவில் குறித்துரைக் கப்பட்ட காலப்பகுதியினுள் செய்யப்பட்டுள்ளது எனவும்,

முதற்றோற்றளவில் திருப்திப்படின், பதிவுசெய்யும் நீதிமன்றமானது அத்தகைய தீர்ப்பை பதிவுசெய்வதற்கு முற்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, தீர்ப்பொன்று இச்சட்டத்தின் நியதிகளின்படி பதிவுசெய்யப்படுகின்றவிடத்து, அத்தகைய பதிவுசெய்யப்பட்ட தீர்ப்பு தொடக்கத்தில் பதிவுசெய்யும் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பொன்றாக இருந்து பதிவுத்தேதியன்று பதிவுசெய்யப்பட்டிருந்தது என்றாற்போன்று, அதே வலுவும் பயனும் அத்தகைய தீர்ப்பை நிறைவேற்றுவதன்மீது அதே கட்டுப்பாட்டைக் கொண்டதாகவும் அது கருதப்படுதல் வேண்டும்.

(3) வெளிநாட்டுத் தீர்ப்பொன்றை ஏற்றங்கீகரித்தல் மற்றும் பதிவுசெய்வதற்கான விண்ணப்பத் தேதியில் உள்ளவாறு, தொடக்க நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட நிவாரணத்தின் பாகமொன்று திருப்திசெய்யப்பட்டுள்ளவிடத்து, பதிவுசெய்யும் நீதிமன்றம் தீர்ப்பின் திருப்திப்படுத்தப்படாத பாகம் தொடர்பில் மட்டும் தீர்ப்பை வலுவுறுத்தலாம்.

*திருமணமொன்றைக் குலைத்தல் அல்லது வெற்றானதாக்குதல் அல்லது திருமணமொன்றுக்கான திறத்தவர்களின் பிரிவினைக்கான வெளிநாட்டுத் தீர்ப்பொன்றை இலங்கையில் ஏற்றங்கீகரித்தல்*

**6.** (1) ஐந்தாம் பிரிவின்கீழ் திருமணமொன்றைக் குலைத்தல் அல்லது வெற்றானதாக்குதல் அல்லது திருமணமொன்றுக்கான திறத்தவர்களின் பிரிவினைக்கான வெளிநாட்டுத் தீர்ப்பொன்றைப் பதிவுசெய்வதன்மேல்-

(அ) அத்தகைய வெளிநாட்டுத் தீர்ப்பு திறத்தவர்கள் முன்னிலையில் வழங்கப்பட்டது என பதிவுசெய்யும் நீதிமன்றத்துக்கும் தோன்றுகின்றவிடத்து, பதிவு செய்யும் நீதிமன்றமானது அத்தகைய தீர்ப்பை இலங்கையில் ஏற்றங்கீகரித்து வெளிப்படுத்துகையொன்றை எடுத்துக்கூறுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய வெளிநாட்டுத் தீர்ப்பு மறுதிறத்தவர் இல்லாமல் பெறப்பட்டது என பதிவுசெய்யும் நீதிமன்றத்துக்குத் தோன்றுகின்றவிடத்து, பதிவுசெய்யும் நீதிமன்றமானது திருமணத்துக்கான அடுத்த திறத்தவருக்கு அறிவித்தலொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நோக்கத்துக்காக, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 59 தொடக்கம் 71 வரையான பிரிவுகளின் ஏற்பாடுகள் அறிவித்தலைச் சேர்ப்பித்தல் தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் 7 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஆட்சேபனை எதுவும் இல்லாதவிடத்தும்

(1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அறிவித்தல் முறையாக சேர்ப்பிக்கப்பட்டது என பதிவுசெய்யும் நீதிமன்றம் திருப்திப்படுவதன் மேலும், பதிவுசெய்யும் நீதிமன்றமானது அத்தகைய வெளிநாட்டு தீர்ப்பினை ஏற்றங்கீகரித்து வெளிப் படுத்துகையொன்றை எடுத்துக்கூறலாம்.

திருமணமொன்றைக் குலைத்தல் அல்லது வெற்றானதாக்குதல் அல்லது திருமணமொன்றுக்கான திறத்தவர்களின் பிரிவினைக் கான வெளிநாட்டுத் தீர்ப்பொன்றை இலங்கையில் ஏற்றங்கீகரிப் பதற்கெதிரான ஆட்சேபனைகள்

**7.** திருமணமொன்றைக் குலைத்தல் அல்லது வெற்றானதாக்குதல் அல்லது திருமணமொன்றுக்கான திறத்தவர்களின் பிரிவினைக் கான வெளிநாட்டுத் தீர்ப்பொன்றை ஏற்றங்கீகரிப்பதற்கான மற்றும் பதிவுசெய்வதற்கான விண்ணப்பமொன்றுக்கான பிரதிவாதி யொருவர், 6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றைப் பெறுவதன் மேல் பதிவுசெய்யும் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அத்தகைய விண்ணப்பத்தை பின்வரும் ஏதுக்களின்மீது ஆட்சேபிக்கலாம்-

(அ) விண்ணப்பதாரர் 4 ஆம் பிரிவில் எடுத்துக்கூறப்பட்ட தேவைப்பாடுகளுள் ஏதேனும் ஒன்றை திருப்திப் படுத்துவதற்கு தவறியுள்ளார் என்ற ஏதுவின்மீது;

(ஆ) மோசடி உள்ளது என்ற ஏதுவின்மீது; அல்லது

(இ) நான்காம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பம் மற்றும் சத்தியக்கடதாசிக்கு இயைபான நிகழ்வுகள் பற்றிய பிறழ்கூற்று ஒன்று உள்ளது என்ற ஏதுவின்மீது.

ஆட்சேபனைகளை மறுத்தலும் திருமணமொன்றைக் குலைத்தல் அல்லது வெற்றானதாக்கல் அல்லது திருமணமொன்றுக்கான திறத்தவர்களின் பிரிவினையை ஏற்றங்கீகரித்தலும் பதிவுசெய்தலும்

**8.** (1) ஏழாம் பிரிவின்கீழ் ஆட்சேபனையொன்றைச் செய்கின்ற திறத்தவர், 7 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட விண்ணப்ப மொன்றை மறுப்பதற்கான ஏதேனும் ஏது உள்ளமையை பதிவு செய்யும் நீதிமன்றத்துக்கு திருப்திப்படுத்துவதற்கு தவறுகின்ற விடத்து, நீதிமன்றமானது அது சார்பில் ஆக்கப்பட்ட கட்டளை யொன்றின்மூலம் அத்தகைய ஆட்சேபனையை நிராகரிக்கலாம் என்பதுடன் எந்த திருமணமொன்று தொடர்பில் அத்தகைய விண்ணப்பம் செய்யப்படுகின்றதோ அந்த திருமணமொன்றைக் கலைத்தல் அல்லது வெற்றானதாக்கல் அல்லது திருமண மொன்றுக்கான திறத்தவர்களின் பிரிவினைக்கான அத்தகைய வெளிநாட்டுத் தீர்ப்பினை ஏற்றங்கீகரித்து வெளிப்படுத்துகை யொன்றை எடுத்துக்கூறுதல் வேண்டும்.

(2) அத்தகைய வெளிப்படுத்துகை, திருமணமொன்றைக் குலைத்தல் அல்லது வெற்றானதாக்கல் அல்லது திருமண

மொன்றுக்கான திறத்தவர்களின் பிரிவினைக்கான அத்தகைய வெளிநாட்டுத் தீர்ப்பு இலங்கையின் தகுதிவாய்ந்த நீதிமன்ற மொன்றினால் வழங்கப்பட்டிருந்தது என்றாற்போன்று, ஏற்றங்கீ கரிக்கப்படுவதான பயனைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*நீதிமன்றம் செலவு தொகைகளை அளிக்கலாம்*

**9.** நீதிமன்றமானது, அது தகுதியானது எனக் கருதுகின்றவாறு **4** ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்துக்கான செலவுதொகைகளை வழங்கலாம் என்பதுடன் பங்கீடும் செய்யலாம்.

*திருமணங்கள் முதலியன வற்றைக் குலைத்தலுக் கான வெளிநாட்டுத் தீர்ப்புக்களை பதிவாளர் தலைமை யதிபதியிடம் பதிவுசெய்தல்*

**10.** பதிவுசெய்யும் நீதிமன்றமானது, திருமணமொன்றைக் குலைத்தல் அல்லது வெற்றானதாக்கல் அல்லது திருமண மொன்றுக்கான திறத்தவர்களின் பிரிவினைக்கான வெளிநாட்டுத் தீர்ப்பொன்றை இலங்கையில் ஏற்றங்கீகரித்து அத்தகைய தீர்ப்பின் விடயத்தில் வெளிப்படுத்துகையொன்றை எடுத்துக்கூறு கின்றவிடத்து, பதிவுசெய்யும் நீதிமன்றத்தின் பதிவாளர் உண்மைப் பிரதி என அத்தகைய பதிவாளரினால் சான்றுப்படுத்தப்பட்ட அத்தகைய வெளிப்படுத்துகையொன்றின் பிரதியொன்றை (112 ஆம் அத்தியாயமான) திருமணப் பதிவுக் கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்காக பதிவாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும்.

*பதிவுசெய்யப் பட்ட தீர்ப்பொன்றை புறத்தொதுக்கு தல்*

**11.** (1) பதிவுசெய்யும் நீதிமன்றம்–

(அ) தீர்ப்பு 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறி பதிவுசெய்யப்பட்டது என;

(ஆ) தீர்ப்புக்கடனாளி வழக்கு நடவடிக்கைகளில் எதிர்வாதமளிப்பதற்கு இயலச்செய்வதற்கு தொடக்க நீதிமன்ற நாட்டின் சட்டத்துக்கு இணங்க அவருக்கு அறிவித்தல் அல்லது போதிய அறிவித்தல், வழங்கப் பட்டிருக்கவில்லை என;

(இ) பதிவுசெய்யப்பட்ட தீர்ப்பு மோசடியாக பெறப்பட்டது என;

(ஈ) தீர்ப்பொன்றை ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்துவதற்கான விண்ணப்பம் எந்த

ஆளினால் செய்யப்பட்டதோ அந்த ஆள் தொடக்க நீதிமன்றத்தின் தீர்ப்பின்கீழ் ஏதேனும் உரிமை, அக்கறை, நன்மை, உரித்து, அந்தஸ்து அல்லது உரித்துடைமையை பெற்றிருக்கவில்லை என; அல்லது

(உ) தீர்ப்பானது தொடக்க நீதிமன்ற நாட்டின் சட்டத்தின் நியதிகளின்படி தொடக்க நீதிமன்றத்தினால் அல்லது தொடக்க நீதிமன்ற நாட்டின் உயர் நீதிமன்றமொன்றினால் மேன்முறையீட்டில் எதிர்மாறாக்கப்பட்டுள்ளது அல்லது புறத்தொதுக்கப்பட்டுள்ளது என,

என திருப்திப்படின், பதிவுசெய்யும் நீதிமன்றம், வெளிநாட்டுத் தீர்ப்பொன்றை பதிவுசெய்வதன் பின்னரான ஏதேனும் நேரத்தில், தீர்ப்புக்கடனாளியினால் அல்லது எந்த திறத்தவரின் உரிமைகள், அக்கறைகள், நன்மைகள், உரித்து, அந்தஸ்து அல்லது உரித்துடைமைகள் பங்கமான முறையில் பாதிக்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் திறத்தவரினால் அல்லது அதன் சொந்தப் பிரேரணையின்மீது அதற்கென உரியமுறையில் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது தீர்ப்பின் பதிவை புறத்தொதுக்குதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், பதிவுசெய்யும் நீதிமன்றம் அது தோதானதெனக் கருதின், இச்சட்டத்தின்கீழ் தீர்ப்பொன்றின் பதிவை புறத்தொதுக்குவதற்கான விண்ணப்பமொன்று தொடர்பில் சான்றளிப்பதற்கு திறத்தவர்களை அனுமதிக்கலாம்.

(3) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 389 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின்கீழ் தீர்ப்பொன்றின் பதிவை புறத்தொதுக்குவதற்கான விண்ணப்பமொன்று தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் தீர்ப்பொன்றின் பதிவை புறத்தொதுக்குதலானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக கோப்பிடப்படுகின்ற தீர்ப்பொன்றைப் பதிவுசெய்வதற்கான புதிய விண்ணப்பமொன்றைத் தடுத்தலாகாது.

மேன்முறையீடுகள்

**12.** (1) திருமணமொன்றைக் குலைத்தல் அல்லது வெற்றான தாக்கல் அல்லது திருமணமொன்றுக்கான திறத்தவர்களின் பிரிவினைக்கான தீர்ப்பொன்று தவிர்ந்த, வெளிநாட்டுத் தீர்ப்பொன்றை ஏற்றங்கீகரித்தல் பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்துவதற்காக செய்யப்பட்ட விண்ணப்பமொன்று தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யும் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு எதுவும் செய்யப்படுதலாகாது.

(2) திருமணமொன்றைக் குலைத்தல் அல்லது வெற்றானதாக்கல் அல்லது திருமணமொன்றுக்கான திறத்தவர்களின் பிரிவினைக் கான வெளிநாட்டுத் தீர்ப்பொன்றை ஏற்றங்கீகரித்தல், பதிவு செய்தல் மற்றும் வலுவுறுத்துவதற்காக ஆக்கப்பட்ட விண்ணப்பமொன்று தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யும் நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்ட ஏதேனும் ஏற்றங்கீகரிப்பு அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையுடன் திருப்தியுறாத எவரேனும் திறத்தவர் அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட இயைபான மேல் நீதிமன்றத்தில் முதலில் கேட்டுப்பெறப்பட்ட அனுமதியுடன் இயைபான மேல் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

திருமணங்கள் முதலியன வற்றைக் குலைப்ப தற்கான வெளிநாட்டுத் தீர்ப்பொன்றை ஏற்றங்கீ கரித்தல் மற்றும் பதிவுசெய்தல் தொடர்பில் தனிவேறான விண்ணப்பங் களைச் செய்தல்

**13.** திருமணமொன்றைக் குலைத்தல் அல்லது வெற்றான தாக்கல் அல்லது திருமணமொன்றுக்கான திறத்தவர்களின் பிரிவினைக்கான வெளிநாட்டுத் தீர்ப்பொன்றுக்கான இரு திறத்தவர்களும் ஒரே தீர்ப்பை ஏற்றங்கீகரிப்பதற்கும் பதிவு செய்வதற்கும் தனிவேறான விண்ணப்பங்களைச் செய்துள்ள விடத்து, பதிவுசெய்யும் நீதிமன்றமானது அத்தகைய விண்ணப்பங்கள் இரண்டையும் ஒன்றுதிரட்டுதல் வேண்டும் என்பதுடன் ஒரே வழக்கு நடவடிக்கைகளில் கட்டளையொன்றை ஆக்குதலும் வேண்டும்.

பாகம் III

## பொதுவான ஏற்பாடுகள்

*பதிவு செய்யப்படக் கூடியவாறான வெளிநாட்டு தீர்ப்புக்கள் வேறுவகையில் வலுவுறுத்தப் படற்பாலத் தக்கதல்ல*

**14.** இரண்டாம் பிரிவின் (1) ஆம் பிரிவின்கீழான கட்டளை யொன்று எந்தத் தேதியன்று வர்த்தமானியில் வெளியிடப் படுகின்றதோ அந்தத் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், அத்தகைய வெளிநாட்டு நீதிமன்றமொன்றின் தீர்ப்பொன்றை ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்துவதற்கான எவையேனும் வழக்குநடவடிக்கைகள், இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்கிணங்க தவிர, இலங்கையில் உள்ள ஏதேனும் நீதி மன்றத்தினால் ஏற்றுக்கவனிக்கப்படுதலாகாது.

*வெளிநாட்டு தீர்ப்புக்களை ஏற்றங்கீ கரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்து வதற்கான விண்ணப்பங் கள் தொடர்பிலான நியாயாதிக்கம்*

**15.** வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும்-

(அ) திருமணமொன்றைக் குலைத்தல் அல்லது வெற்றான தாக்கல் அல்லது திருமணமொன்றுக்கான திறத்தவர்களின் பிரிவினைக்கான தீர்ப்பொன்று தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எந்த வெளிநாட்டுத் தீர்ப்பொன்றுக்கு ஏற்புடைய தாகின்றதோ அந்த வெளிநாட்டுத் தீர்ப்பொன்றை ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்துவதற்கான விண்ணப்பமொன்றின் விடயத்தில், கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அல்லது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சரினால் பெயர்குறிக்கப்படக்கூடியவாறான வேறு ஏதேனும் நீதிமன்றம்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எந்தத் திருமண மொன்றுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்தத் திருமணமொன்றைக் குலைத்தல் அல்லது வெற்றானதாக்கல் அல்லது திருமணமொன்றுக்கான திறத்தவர்களின் பிரிவினைக்கான வெளிநாட்டுத்

தீர்ப்பொன்றை ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்துவதற்கான விண்ணப்பமொன்றின் விடயத்தில், கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அல்லது அத்தகைய தீர்ப்புக்கான எவரேனும் திறத்தவர் எந்த மாவட்ட நீதிமன்றத்தின் நியாயாதிக்க இடப்பிரதேச எல்லைகளினுள் வதிகின்றாரோ அந்த மாவட்ட நீதிமன்றம்,

இச்சட்டத்தினாலும் 20 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினாலும் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் அத்தகைய விண்ணப்பத்தைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கான நியாயாதிக்கத்தையும் நீதிநெறிக் கவனத்தையும் மற்றும் முழுத் தத்துவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் ஏற்புடைமை

**16.** இச்சட்டத்தின்கீழ் வெளிநாட்டு தீர்ப்புக்களை விடயத்துக் கேற்ப ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்தல் தொடர்பான அழைப்பாணைகளின் சேர்ப்பிப்பு, மன்றாணைகள் அறிவித்தல்கள் அல்லது வேறு ஏதேனும் ஆவணத்தைச் சேர்ப்பித்தல் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் அத்தியாயங்கள் VIII மற்றும் XXII இல் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் செய்யப்படுதல் வேண்டும்.

நீதிமன்றத்தில் முன்வைக்கப் பட வேண்டிய ஆவணங்களின் மொழி

**17.** (1) திருமணமொன்றைக் குலைத்தல் அல்லது வெற்றான தாக்கல் அல்லது திருமணமொன்றுக்கான திறத்தவர்களின் பிரிவினைக்கான வெளிநாட்டுத் தீர்ப்பொன்றின் மொழி ஆங்கில மொழி தவிர்ந்த மொழியொன்றில் உள்ளவிடத்து, அத்தகைய தீர்ப்பு உயர் நீதிமன்றத்தின், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அல்லது மேல் நீதிமன்றத்தின் உரைபெயர்ப்பாளரினால் அல்லது ஏதேனும் மாவட்ட நீதிமன்றத்தின், குடும்ப நீதிமன்றத்தின், நீதிவான் நீதிமன்றத்தின் அல்லது ஆரம்ப நீதிமன்றத்தின் சத்தியப் பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர் ஒருவரினால் அல்லது உரைபெயர்ப்பாளரினால் அல்லது சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர் ஒருவரினால் ஆங்கிலமொழியில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு கையொப்பமிடப்பட்ட அதன் மொழிபெயர்ப்பொன்று சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்" என்பது, இலங்கையின் மாவட்ட நீதிமன்றமொன்றின் மாவட்ட நீதிபதியொருவரின் முன்னிலையில் சத்தியத்தைச் செய்து கையொப்பமிட்டுள்ள அல்லது உறுதியுரையை மொழிந்து கையொப்பமிட்டுள்ள மொழிபெயர்ப்பாளர் ஒருவர் எனப்பொருள்படும்.

சத்தியக் கடதாசிகளில் நிகழ்வுகள் பற்றிய பொய்யான கூற்றுக்களைச் செய்தல்

**18.** இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட சத்தியக்கடதாசியொன்றில் நிகழ்வுகள்பற்றிய ஏதேனும் பொய்யான கூற்றை வேண்டுமென்றும் நேர்மையீனமாகவும் செய்கின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, இரண்டு இலட்சம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டுக்குக் குறையாத காலப்பகுதியொன்றிற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

தவிர்க்கப்பட்ட விடயம்

**19.** இச்சட்டத்தின் ஏற்பாடுசெய்யப்படாத நடவடிக்கைமுறை பற்றிய ஏதேனும் விடயத்தில் அல்லது கேள்வியில், அதே விடயம் அல்லது கேள்வியொன்று தொடர்பில் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையில் விதிக்கப்பட்ட நடவடிக்கைமுறை, அத்தகைய நடவடிக்கைமுறை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாக விராதிருப்பின், அந்நீதிமன்றத்தினால் பின்பற்றப்படுதல் வேண்டும்.

விதிகள்

**20.** (1) அமைச்சர், காலத்துக்குக்காலம், எக்கருமங்களுக்காக இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக விதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் விதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பொதுமைக்குப் பங்கமின்றியும், பின்வரும் கருமங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்படலாம்:-

(அ) வெளிநாட்டுத் தீர்ப்பொன்றை ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்துவதற்கானதும் பதிவுசெய்யப்பட்ட தீர்ப்பொன்றை புறத்தொதுக்கு வதற்கானதுமான விண்ணப்பமொன்றை கோப் பிடுதலும் அத்தகைய நோக்கங்களுக்காக பயன் படுத்தப்படவேண்டிய படிவங்களும்;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட சத்தியக்கடதாசிகள் அடங்கியிருக்கவேண்டிய நிகழ்வுகள் பற்றிய கூற்று;

(இ) இச்சட்டத்தின்கீழ் கோப்பிடப்பட்ட விண்ணப்ப மொன்றுடன் சேர்த்தனுப்பப்படவேண்டிய ஆவணங் களை விதித்துரைத்தல்;

(ஈ) வெளிநாட்டுத் தீர்ப்பொன்றை ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்துவதற்காக விண்ணப்பிக்கும்போது பிணைப்பொறுப்பளித்தல்;

(உ) பதிவு பற்றிய அறிவித்தலை சேர்ப்பிக்கும் முறையும் அத்தகைய அறிவித்தலின் உள்ளடக்கமும்;

(ஊ) இச்சட்டத்தில் வெளிப்படையாக ஏற்பாடுசெய்யப்பட்ட காலவரையறைகளுக்கமைய, இச்சட்டத்தின்கீழ் புரியப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் செயலைப் புரிவதற்கான கால வரையறைகள்;

(எ) தொடக்க நீதிமன்றத்தின் நாட்டின் சட்டத்தின்கீழ் வெளிநாட்டுத் தீர்ப்பொன்றின்கீழ் செலுத்தப்படற் பாலதான ஏதேனும் வட்டி எந்த முறைமூலம் தீர்மானிக்கப்படவேண்டுமோ அந்த முறையை விதித்துரைத்தல்;

(ஏ) செலவுதொகைகளை அளித்தல் தொடர்பான கருமங்கள்; அத்துடன்

(ஐ) இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கென இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்ற வேறு ஏதேனும் கருமம்.

(3) இப்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியிலிருந்து அல்லது அத்தகைய விதியில் குறித்துரைக்கப்படுகின்றவாறான வேறொரு தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

நீக்கங்கள்

**21.** நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக-

(அ) (93 ஆம் அத்தியாயமான) வெளிநாட்டு தீர்ப்புக்களின் வலுவுறுத்துகைக் கட்டளைச்சட்டம்; அத்துடன்

(ஆ) (94 ஆம் அத்தியாயமான) தீர்ப்புக்களின் பரஸ்பர வலுவுறுத்துகைக் கட்டளைச்சட்டம்,

நீக்கப்பட்டதாதல் வேண்டும்.

பேணல்கள் மற்றும் நிலை பெயர்கால ஏற்பாடுகள்

**22.** (இப்பிரிவில் "நீக்கப்பட்ட கட்டளைச்சட்டம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (94 ஆம் அத்தியாயமான) தீர்ப்புக்களின் பரஸ்பர வலுவுறுத்துகைக் கட்டளைச்சட்டத்தின் நீக்கம் எவ்வாறிருப்பினும்-

(அ) நீக்கப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர் முற்போந்த நாளன்று வலுவிலுள்ளதுமான ஒவ்வொரு கட்டளையும், நேரொத்த நீதிமன்றங்களின் தீர்ப்புக்களுக்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நீடித்து இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் கட்டளையொன்று ஆக்கப்படும்வரை, அத்தகைய கட்டளையில் வெளிப்படுத்தப்பட்ட நீதிமன்றங்களின் தீர்ப்புக்கள் தொடர்பில் செல்லுபடியானதாகவும் பயனுள்ள தாகவும் இருத்தல் வேண்டும்;

(ஆ) நீக்கப்பட்ட கட்டளைச்சட்டத்தின்கீழ் கோப்பிடப் பட்டனவும் தொடுக்கப்பட்டனவும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்

s



ளனவுமான எல்லா விண்ணப்பங்களும் வழக்கு நடவடிக்கைகளும் நீக்கப்பட்ட கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மேற்கொண்டு நடாத்தப்படுதலும் முடிவுறுத்தப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(இ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் பதியப்பட்டனவும் அல்லது ஆக்கப்பட்டனவும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று ஒன்றில் முழுமையாக அல்லது பகுதியளவில் திருப்திசெய்யப்படாது எஞ்சியுள்ளனவுமான எல்லா தீர்ப்புக்களும், தீர்வைகளும் அல்லது கட்டளைகளும் நீக்கப்பட்ட கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மேற்கொண்டு நடாத்தப்படுதலும் முடிவுறுத்தப்படுதலும் வேண்டும்.

**23.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப் படுத்தினாலொழிய- பொருள் கோடல்

"விண்ணப்பதாரர்" என்பது, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, தீர்ப்புத்தேதியன்றுள்ளவாறு அல்லது அதன்பின்னர் தீர்ப்புக்கடன்கொடுநர் ஒருவர் அல்லது தொடக்க நீதிமன்றத்தின் தீர்ப்பின்கீழ் ஏதேனும் உரிமை, அக்கறை, நன்மை, உரித்து, அந்தஸ்து அல்லது உரித்துடைமையைப் பெற்றுள்ள எவரேனும் ஆளை உள்ளடக்கும்;

"குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை" என்பது, (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை எனப்பொருள்படும்;

"தொடக்க நீதிமன்ற நாடு" என்பது, எந்த நாட்டில் தொடக்க நீதிமன்றம் அமைந்துள்ளதோ அந்த நாடு எனப் பொருள்படும்;

"திருமணமொன்றைக் குலைத்தல் அல்லது வெற்றானதாக்கல் அல்லது திருமணமொன்றுக்கான திறத்தவர்களின் பிரிவினை" என்பது, இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின்

தகுதிவாய்ந்த சட்ட நீதிமன்றமொன்றில் வழக்கு நடவடிக்கைகள் என்ற வகையாகப் பெறப்பட்ட ஏதேனும் மணநீக்கம், திருமணமொன்றின் வெற்றானதாக்குகை அல்லது திருமணமொன்றுக்கான திறத்தவர்களின் நீதிமுறைப் பிரிவினை எனப்பொருள்படும்;

"நாடொன்றில் வாழிடத்தைக் கொண்டிருத்தல்" என்பது, அந்நாட்டின் சட்ட நியதிகளின்படி வாழிடத்தைக் கொண்டிருத்தல் எனப்பொருள்படும்;

"தீர்ப்பு" என்பது, இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்டுள்ள வெளிநாடொன்றின் தகுதியான நீதிமன்றமொன்றினால் வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஒரு தீர்ப்பு, தீர்வை அல்லது கட்டளை எனப்பொருள்படும்; ஆனால் பின்வருவன தொடர்பாக வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஒரு தீர்ப்பை, தீர்வையை அல்லது கட்டளையை உள்ளடக்காது-

(அ) ஏதேனும் இறைமைகொண்ட அரசுக்கெதிராக;

(ஆ) ஏதேனும் திருமணம்சார் விடயத்தில் ஆதனக் கொடுத்துத் தீர்த்தல் தொடர்பில்;

(இ) கடனிறுக்க வகையறவு தொடர்பான வழக்கு நடவடிக்கைகளில்;

(ஈ) கம்பெனிகளை ஒடுக்குதல் தொடர்பான வழக்கு நடவடிக்கைகளில்;

(உ) சித்தசுயாதீனமின்மை தொடர்பான வழக்கு நடவடிக்கைகளில்;

(ஊ) பராயமடையாத ஒருவரின் பாதுகாப்பாண்மை, கட்டுக்காப்பு அல்லது பராமரிப்பு அல்லது பராயமடையாத ஒருவரின் மரணச்சொத்தின்

காப்பாண்மை தொடர்பான வழக்குநடவடிக்கைகளில்; அல்லது

(எ) சித்தசுயாதீனமற்ற ஆளொருவரின் பாதுகாப்பாண்மை மற்றும் மரணச்சொத்தின் முகாமை தொடர்பான வழக்குநடவடிக்கைகளில்.

"தீர்ப்புக்கடன்கொடுநர்" என்பது, எந்த ஆளுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டதோ அந்த ஆள் எனப்பொருள்படும் என்பதுடன், இலங்கையில் பதிவுசெய்யப்படுவதற்கு நாடப்பட்ட தீர்ப்பின்கீழ் ஏதேனும் உரிமை, அக்கறை, நன்மை, உரித்து, அந்தஸ்து அல்லது உரித்துடைமையைப் பெற்றுள்ள எவரேனும் ஆளையும் உள்ளடக்கும்;

"தீர்ப்புக்கடனாளி" என்பது, ஆளுக்கெதிராக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதோ அந்த ஆள் எனப்பொருள்படும் என்பதுடன், எந்த ஆளுக்கெதிராக தீர்ப்பு வலுவுறுத்தப்படற்பாலதாகவுள்ளதோ அந்த எவரேனும் ஆளையும் உள்ளடக்கும்;

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் உறுப்புரை 44 அல்லது 45 இன் நியதிகளின்படி நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் எனப்பொருள்படும்;

"தொடக்கநீதிமன்றம்" என்பது, ஏதேனும் தீர்ப்பு தொடர்பில் எந்த நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டதோ அந்த நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தை பிரயோகிப்பதில் தீர்ப்பொன்றை உறுதிப்படுத்தியுள்ள அல்லது பதிந்துள்ள ஓர் மேல்நிலை நீதிமன்றம் எனப் பொருள்படும்;

"விதித்துரைக்கப்பட்டது" என்பது, இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் விதித்துரைக்கப்பட்டது எனப்பொருள்படும்; அத்துடன்

"பதிவுசெய்யும் நீதிமன்றம்" என்பது,

(அ) திருமணமொன்றைக் குலைத்தல் அல்லது வெற்றானதாக்கல் அல்லது திருமணமொன்றுக்கான திறத்தவர்களின் பிரிவினைக்கான தீர்ப்பொன்று தவிர்ந்த தீர்ப்பொன்று தொடர்பில், கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அல்லது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான வேறு ஏதேனும் நீதிமன்றம் எனப் பொருள்படும்; அத்துடன்

(ஆ) திருமணமொன்றைக் குலைத்தல் அல்லது வெற்றானதாக்கல் அல்லது திருமணமொன்றுக்கான திறத்தவர்களின் பிரிவினைக்கான தீர்ப்பொன்று தொடர்பில் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அல்லது அத்தகைய தீர்ப்புக்கான எவரேனும் திறத்தவர் எந்த மாவட்ட நீதிமன்றத்தின் நியாயாதிக்க இடப்பிரதேச எல்லைகளினுள் வதிகின்றாரோ அந்த மாவட்ட நீதிமன்றம் எனப்பொருள்படும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**24.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.